## பதிப்பகக் குறிப்பு

மனிதன் தன்னலத்தோடு பிறர் நலத்துக்குத் தொண்டு புரிவதை அறிவுடை உலகம் போற்றுகின்றது. பிறர் நலம் பெறப் பாடுபடுவதில் தன்னலம் துறப்பவர் மேலும் சிறப்பிக்கப்படுவர். பிறர்க்கு உழைப்பதே பேரின்பம் என்ற நோக்குடையோரை உலகம் பாராட்டுகின்றது. அப்பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளைப் பின்னவர் படித்துப் பயன்பெறுகின்றனர். இதனை உணர்ந்தே பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகள் வரையப்படுகின்றன. பெருமக்கள் வரலாறுகள் பல இற்றைத் தமிழர்க்கு வேண்டற்பாலன, கலங்கி நிற்கும் தமிழனைக் களிப்பெய்துமாறு.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதற்கொப்பத் தமிழக முதன் மந்திரியாக விளங்கும் திரு. காமராசரின் வாழ்வோடிணைந்த அரசியலை அனைவரும் அறிந்திருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இப் புத்தகத்தைத் தமிழ் மக்களின் முன் படைக்கின்றோம்.

இந்நூலை எழுதிய பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்களைத் தமிழ் நாடு நன்கறியும். இருபதாண்டுகட்கு மேலாகத் தமிழக மறுமலர்ச்சிக்கு ஒல்லும் வகையால் உழைத்து வரும் அறிஞராவார். இவர்கள் திரு. காமராசரின் வாழ்க்கையையும், இன்றைய-நாளைய தமிழக அரசியலையும் புதிய முறையில் நடுநிலை தவறாது ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். பொருளில் புதுமையும், நடையில்விறுவிறுப்பும், போக்கில் அரிமாநோக்கும் பொருந்தியுள்ள இந்நூல் தமிழிலக்கியப் பூங்காவின் புதிய மலராகும்.

எமது அன்பார்ந்த வேண்டுகோளை ஏற்று அணிந்துரையளித்த பேரறிஞர் பா. நடராசனார் அவர்கட்கு எம் உளமார்ந்த நன்றி.

நாஞ்சில் புத்தகமனை
நாகர்கோயில்

## முன்னுரை

தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்று வளரத் தொடங்கியுள்ளது. கதைகள், சிறுகதைகள், நாடகங்கள், ஆராய்ச்சி நூல்கள், கவிதைகள் முதலியன பெருகிவருகின்றன. வாழ்க்கை வரலாறுகள் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக எப்பொழுதேனும் வெளிவருகின்றன. பிற வகைகளையொப்ப மிகுதியாக வெளிவந்தில. வருவனவும், இற்றைய தமிழ்த் திரைக்காட்சிக் கதைகள்போல், ஒரே படித்தாக இருக்கின்றன. வியத்தற்குரிய நிகழ்ச்சிகளையுடையனவாய் சுவைபல அளித்து அறிவுபல நிரப்பும் தன்மையுடையனவாய் இல்லை. ஏன்?

இங்கு, 'எல்லாம் விதிப்பயன்' என்ற கொள்கைக்கு அடிமைப்பட்டு உழைப்பில் விருப்பமின்றி ஊக்கம் குன்றி உழல்கின்றவர்களே மிக்குள்ளனர். எளிய நிலையில் தோன்றி அதனால் சோர்வு அடையாமல் தன்முயற்சியால் உயர்வடையலாம் என்று கருதி உழைத்துயர்ந்தோர் தொகை மிக மிகக் குறைவு. உயர் நிலையில் இருப்போரில் பலர், உயர்ந்த சாதியினராய், பெருஞ் செல்வமுற்றோராய் மேல்நாட்டுக் கல்விபெறும் வசதியுடையோராய் எவரும் போற்றும் சூழ்நிலையில் உள்ளவர்கள். கீழ் சாதி என்று கருதப்படுபவரும், வறுமையில் பிறந்தோரும் மேனாட்டுக்

கல்வி பெறும் வாய்ப்பு அற்றோரும், கனவில் கூட உயர் நிலைகள் பற்றி எண்ணத்துணியார். பிறநாடுகளின் நிலைமையோ வேறு. அங்கெல்லாம் புகழ்பெற்று விளங்குகின்ற தலைவர்கள், அறிஞர்கள், புலவர்கள், புதியன புனைவோர், ஆராய்ச்சியாளர்கள், கலைஞர்கள் முதலியோர்களில் பெரும்பான்மையினர் தன்முயற்சியால் உழைத்து அல்லல் பலவுற்று ஆக்கம் பெற்று உயர்ந்தோராய் உள்ளனர். அங்குள்ள சூழ்நிலை அவ்வாறு ஆக உதவி புரிகின்றது. இங்குள்ள சூழ்நிலை, எவரும் முன்னேற்றமடையாத நிலைக்குக் கொண்டுசெல்கின்றது. இங்குள்ள மக்களோ 'வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம்' என்ற கருத்தினராய் வாழ்பவர்; தாமும் உயர முயலார்; உயர்வோர்க்கும் உதவ நினையார். பிறர் ஆக்கம் கண்டு புழுங்குவோர், பொல்லாங்கு புகல்வோர், அடுத்துக் கெடுப்போர், உதவிகொல்வோர், நன்றி மறப்போர், திரித்துக் கூறுவோர், உழைப்பை இகழ்வோர் எங்கும் நிறைந்துளர்

இச் சூழ்நிலையில்தான் திருவாளர் காமராசர் அவர்கள் எளியராய்ப் பிறந்து எளியராய் வளர்ந்து உயர்நிலையை அடைந்துள்ளார்கள். அவர் பிறந்த சூழ்நிலையில் ஒரு நாட்டின் முதல் அமைச்சராய் வருவதென்பது இந் நாட்டில் நினைக்க முடியாத ஒன்று; செயற்கரும் செயலேயாகும். ஆகவே திருவாளர் காமராசர் வாழ்க்கை நம் நாட்டு இளைஞர்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும் எனறு கருதினோம்; இந்நூலை எழுதினோம்.

யாம் கருமவீரர் காமராசர் பற்றி நூல் எழுதுகின்றோம் என்பதை அறிந்த சிலர், வியப்புற்றனர். இது நடக்கக்கூடியதா என்றனர். இவரெல்லாரும் திருவாளர் காமராசர் பற்றியும் என்னைப் பற்றியும் நன்கு அறியாதவரே ஆவர்.

“ திருவாளர் காமராசர் காங்கிரசுக்கட்சியின் பெருந் தலைவர்களுள் ஒருவர்; வடநாட்டுத் தலைமைக்கு உறுதுணையாக நிற்பவர்; தமிழ்ப் பற்றோ தமிழர் பற்றோ அற்றவர்.



இலக்குவனார் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர். இவரா காமராசரைப் பற்றி நூல் எழுதுகின்றனர்” என்றெல்லாம் உரையாடல்கள் நிகழ்ந்தன. திருவாளர் காமராசர் தமிழ்ப் பற்றும் தமிழர் பற்றும் அற்றவர் என்று கூறுதல் மிகமிகத் தவறு. “யாம் திராவிட கழகத்தைச் சேர்ந்தவராவோம்; அதனால் அவர் வரலாறு எழுதுதல் கூடாது” என்பதும் தவறு. பிறர் நினைப்பதுபோல் யாம் திராவிட கழகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் அது குற்றமாகாது. திராவிட கழகத் தலைவர் பெரியார், காமராசர் அவர்களை ஆதரிப்பதனால் யாமும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்ற கருத்தில் கூறவில்லை. தனித்தன்மை வேறு; கட்சித்தன்மை வேறு. என்றுமே கட்சிக்கண்கொண்டு பார்த்து மதித்தல் நன்றன்று. தனிப்பட்ட முறையில் காணப்படும் சீர்மைகளைப் பாராட்டவேண்டும். மாற்றுக் கட்சியினராய் இருப்பினும், மக்கள் என்ற முறையில் பழகும் மாண்பார் குணம் பெற்றிருக்கவேண்டும். கட்சிவெறி மதவெறிபோல் ஆகிவிட்டது. மதவெறியால் மக்கள் போரிட்டு மாண்டது போல் கட்சி வெறியாலும் போரிட்டு மாள்கின்றனர். இவ்வலநிலை நீங்கவேண்டும். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை, மாற்றுக்கட்சியாளர் பாராட்டவேண்டிய இடத்தில் பாராட்டத்தான் வேண்டும்.

யாம் திராவிட கழக உறுப்பினராக என்றும் இருந்ததில்லை. ஆனால் திராவிட கழகத் தலைவர் பெரியார் அவர்களிடத்தில் பெருமதிப்புடையோம். சாதி ஒழிப்பு, இந்தியைக் கட்டாயமாக்காமை, திருக்குறள் பரப்புதல், வகுப்புரிமை போற்றல் முதலியவற்றில் யாமும் பங்குகொண்டு பெரியார் வழிநின்று கடனாற்றினோம். அதனால் எம்மையும் திராவிட கழகத்தினரெனக் கருதினர் பலர். சில செய்தி இதழ்கள் அவ்வாறே வெளியிட்டன. யாம் மறுப்பு வெளியிட எழுதியும் அவை வெளியிடாமல் எம்மைத் 'திராவிடக் கழகப் பிரமுகர்' என்றே வெளியிட்டு வந்தன. ஆனால் யாம் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவரல்லேம். எமக்கெனத் தனிக்கொள்கைகள் உண்டு.

"தமிழ் எமது உயிர்; தமிழன் உயர்வே தமிழ் நாட்டின் உயர்வு. தமிழ்நாட்டில் தமிழுக்குத்தான் முதன்மை உண்டு. தமிழ் நாடு ஏனைய நாடுகள் போல் உரிமையாட்சி பெற்றுத் தமிழர்களால் ஆளப்படவேண்டும். குலமும் குடியும் ஒன்றே; வழிபடு கடவுளும் ஒன்றே. யாதும் ஊரே; யாவரும் கேளிர். குறள் நெறி யோங்கினால் குடியரசோங்கும்" என்ற கொள்கைகளே எம் வாழ்வை இயக்குவன. யாம் ஒரு புலவர்; எழுத்தாளர். ஆகவே யாம் யாவர்க்கும் பொதுவான நிலையில் உள்ளோம். கட்சி காரணமாக விருப்போ வெறுப்போ கொள்ளவேண்டிய நிலையில் இல்லோம். ஆனால் தமிழ்ப் பகைவர் எமது பகைவராவர்; தமிழ் நண்பர் எமது நண்பராவார்.

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து தரணியொடு
வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்பேம் அல்லேம்;
மாதமிழுக்கே அன்பர் அல்லராகில்
எங்குமுள இடமெலாம் சுற்றி ஓடி
இரந்துண்ணும் இழிவாழ்க்கை உடையரேனும்
தங்குபுகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

என்ற உறுதிப்பாட்டில் நிலைத்த உரனுடையோம். "சென்ற பொதுத் தேர்தலில் திருவாளர் காமராசர் அவர்களை எதிர்த்து, கோவை அறிஞர் G. D. நாயுடுவை ஆதரித்தார். இன்று முதல் அமைச்சரைப் புகழ்பாடி முதன்மைபெற விரும்புகின்றார்" என்று மொழிவோரும் உளர். சென்ற பொதுத் தேர்தலில் அறிஞர் G. D. நாயுடு பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டுமென்று விரும்பி உழைத்தது உண்மைதான். அதன் விளைவாய் திருவாளர் காமராசர் அவர்களைத் தேர்தலில் எதிர்த்தோம் எனப் பிறர் கருதியதும் உண்மைதான். ஆனால் அன்று யாம் கூறியதென்ன? திருவாளர் காமராசர் சென்னைச் சட்டசபைக்கு உறுப்பினராக நிற்கட்டும். அறிஞர் நாயுடுவைப் பாராளுமன்றுக்கு அனுப்பட்டும். காமராசர் சென்னை மன்றத்துச் செல்லலும் அறிஞர் நாயுடு பாராளுமன்றத்திற்குச் செல்லலும் இருவர்க்கும் பெருமையும் நாட்டுக்கு நன்மையும் உண்டாகும் என்று கூறினோம். யாம் எண்ணியவாறு ஒன்று நிகழ்ந்துவிட்டது. திருவாளர் காமராசர் சென்னை மன்ற உறுப்பினராகி முதல் அமைச்சர் ஆகிவிட்டார்கள். அறிஞர் நாயுடு பாராளுமன்று செல்லவேண்டுமென்ற இன்னொன்று இன்னும் நிறைவேறவில்லை. திருவாளர் காமராசர் எண்ணினால் எளிதில் முடியும். தமிழ் நாட்டின் அறிவியற் பேரறிஞரைக் காட்டில் மலர்ந்த மலராகக் கழிய விடுதல் நன்றன்று என்று கூற விரும்புகின்றோம். அறிவியல் அறிஞர்க்குப் பாராளுமன்றில் என்ன வேலை என்று சிலர் வினவலாம். அவர் அங்குச் சென்றால்தான் அவர்மேற்கொண்டுள்ள அறிவியல் கண்டுபிடிப்புகளை நாட்டுக்குப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கிக் குறைந்த விலையில் கொடுக்கச் செய்ய இயலும். பேரறிஞர் நாயுடு அவர்களும் உழைப்பால் உயர்ந்த ஒரு பெரியார். அவரை இராச்சிய சபைக்கேனும் நியமித்துக் கொள்ளுதல் வேண்டும். திரைக்காட்சிக் கலைஞரும், பாணரும், கூத்தரும் நியமிக்கப்படுகின்றபொழுது அறிவியற் பேரறிஞரை அழைத்துப் பயன்பெறவேண்டாமா? திருவாளர் காமராசர் அவர்கள் அறிஞர் நாயுடுவை நன்முறையில் நாட்டுக்குப் பயன்படுத்தவேண்டுமென்று பணிவார்ந்த அன்புடன் வேண்டுகின்றோம்.

உழைப்பால் உயர்ந்தோர்களிடத்தில் எல்லாம் தனி மதிப்பும் பற்றும் எமக்கு எப்போதும் உண்டு. எட்டாண்டுகட்கு முன்னர் முதல் அமைச்சராக வருவதற்கு முன்னர், வருவார் என்று எவரும் எண்ணாத காலத்தில், யாம் அவரைப்பற்றி எழுதியதை இப்புத்தகத்தின் இறுதியில் சேர்த்துள்ளோம். அதைப் படித்தால் யாம் அன்று அவர்பால் கொண்டுள்ள பெருமதிப்பை அறியலாம். ஆகவே இன்று முதல் அமைச்சராக இருப்பதனால் முகமன் கூறிப் புகழ்தேட எண்ணிப் புனைந்துரைக்கப் புகுந்து விட்டோம் என்று எண்ணுவது அறிவின்பாற் பட்டதாகாது.

திருவாளர் காமராசர் அவர்கள் வாழ்க்கை வரலாறு முழுவதும் எழுதவேண்டுமென்றால் அவர்களுடன் பலநாள் பழகவேண்டும். அவர் வாயிலாகப் பல செய்திகளையும் வாழ்வின் நுட்பங்களையும் அறிந்திட வேண்டும். அவ்வாய்ப்புகள் இல்லா நிலையில் இப் புத்தகம் வெளிவருகின்றது. குற்றம் களைந்து குறைபெய்து படித்திட வேண்டுகின்றோம்.

இப்புத்தகத்திற்கு அணிந்துரை ஒன்று எழுதுமாறு திருவாளர் Dr. பா. நடராசனார் M. A., D. Litt அவர்களை வேண்டினோம். சென்னை நாட்டின் பொருளியல் அறிவுரையாளராய் இருந்து பணிபுரிந்த அவர்கள் இந்துக்கல்லூரியின் ஏற்றம் குறித்து இங்குப் பணிபுரிந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. தமிழ்ப் புலமையும் ஆங்கிலப்புலமையும் நிறையப் பெற்ற அவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்வதே தமது கடனெனக் கருதி அயராது உழைத்து வருகின்றனர். அன்போடு அணிந்துரை எழுதியளித்த பெருந்தகைமைக்கு எம் உளமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்கின்றோம்.

நாஞ்சில் புத்தகமனை (Nanjil Book House) இப்பொழுதுதான் தோன்றியுள்ளது. அதன் முதல் விருந்து இந்நூலாகும். விருந்தை அருந்தி மகிழுவோர் அனைவர்க்கும் எம் நன்றி.

**சி. இலக்குவன்.**

சென்னை இராச்சியத்தின் முன்னாள் பொருளியல் அறிவுரைஞரும் நாகர்கோயில் இந்துக் கல்லூரியின் இந்நாள் முதல்வருமாய Dr. பா. நடராசன் M. A., D. Litt அவர்கள் அளித்தது

# அணிந்துரை

**காமராஜர்** முதல் அமைச்சராக வந்ததும் வியப்புற்றோர் சிலர்; அதிர்ச்சியுற்றோர் சிலர். ஆனால் மக்களாட்சியெனும் மாது நல்லாள் உளம் பூரித்தாள்; உவகை கொண்டாள். அரசியலிலே பல்லாண்டுகளாக ஆள்வோர் குழுவோடிணைந்து மக்கள்மீது ஆணைசெலுத்தி தலைமை கொண்ட நிலைமை மாறி, தாளாலே நீரையுண்டு தலையாலே காய்தரும் தென்னையின் இயற்கை வளர்ச்சி நிலைமை, முதன் முதல் தோன்றியது இவர் வருகையாலே. இதற்கென இவர் கொண்ட அடக்கமும் ஒடுக்கமும் பொருதகர் தாக்கற்குப் பெயரும் தகைத்தாயின. பணியுங்கால் பணிந்து நிமிருங்கால் நிமிரும் இவர் அரசியல் சதுரப்பாடு, பொறுமையின் மையோர்க்கு அச்சம் கலந்த கோழைத்தனம்போல் தோன்றும். காமராஜர் அடக்கத்தினால் வரும் அமர ஆற்றல் கொண்டவர்.

நமது காலத்து வாழும் ஒருவர் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது என்பது எவர்க்கும் எளிதன்று.